**நிகழும் திருவள்ளுவராண்டு ஸ்ரீவிகாரி வருடம் 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் தேதி மாசி மாதம் 19ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள தாராபுரம் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

----

1. தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 9 சந்தைபேட்டை வளாகத்தில் உள்ள நுண் உரக்கிடஙகு செயல்பட்டு வருகிறது அதில் குப்பைகளை அறைப்பதற்காக குப்பைகளை அறைக்கும் இயந்திரம் (Shredder Machine) பயன்படுத்தப்பட்டுவருகிறது. தற்போது இயந்திரத்தில் பழுதுஏற்பட்டு பயன்படுத்த இயலாதநிலை உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி இயந்திரம் நிறுவியLingaAgri Trading And Machinery Pvt., Ltd., நிறுவனத்தார் வசம் ஒப்படைப்பு செய்து பழுதுநீக்கம் செய்யும் ப

ணிமேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.19068/– மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:1823/2020/இ1**

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

2. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலைய வடபுற வெளிப்புறகடைஎண்.29க்கு 48 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை. 27.02.2020 அன்று நடைபெற்ற மறு ஏல மறு ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்ந்தப்புள்ளி கேள்வித் தொகை மாதம் ஒன்றிற்கு |
|---|---|---|
| 1. | திருமதி.ஜா.ஹபிநிஷா,<br>க/பெ.ஜாபர்சாதிக்,<br>46/21, பஜனை மடத் தெரு,<br>தாராபுரம் | ரூ. 6700 /– |
| 2. | திரு.அ.ஷாஜஹான்,<br>த/பெ.அபுபக்கர்,<br>50/4, குளத்துபுஞ்சைத் தெரு,<br>தாராபுரம். | ரூ. 5500/– |

**அலுவலகக் குறிப்பு :**

பேருந்துநிலைய வடபுற வெளிப்புறகடைஎண்.29க்கு அருகில் நகராட்சி வடபுறக் கட்டண கழிப்பிடம் உள்ளதால், 48முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை. 49வது அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதில், திருமதி. ஜா.ஹபிநிஷா, என்பவர்

உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.6700/– வழங்கியுள்ளார். இது முந்தைய வாடகைத் தொகை ரூ.6600/– விட கூடுதலாக உள்ளது. மேலும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோருவதால், நகராட்சிக்கு கால விரயம் மற்றும் நிதியிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளித் தொகையை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

முந்தைய குத்தகைதாரரின் வைப்புத் தொகையை நகராட்சி கணக்கில் எடுத்துக் கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4451/2013/அ3**

**3.** தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலைய வடபுற வெளிப்புறகடைஎண்.3க்கு 59 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை. 27.02.2020 அன்று நடைபெற்ற மறு ஏல மறு ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட விபரப்படி ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்ந்தப்புள்ளி கேள்வித் தொகை மாதம் ஒன்றிற்கு** |
|---|---|---|
| 1. | எஸ்.சாத்தையா,<br>த/பெ.சுந்தர்ராஜ்,<br>15/33,அகமுடையார் தெரு,<br>தாராபுரம் | ரூ. 6700 /– |

**அலுவலகக் குறிப்பு :**

பேருந்துநிலைய வடபுற வெளிப்புறகடைஎண்.3க்கு அருகில் நகராட்சி இலவச கழிப்பிடம் உள்ளதால், 59முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை. 60வது அழைப்பில் வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. அவ்ஒப்பந்தபுள்ளி தொகையானது முந்தைய வாடகைத் தொகை ரூ.6600/– விட கூடுதலாக உள்ளது. இனி ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோருவதால், நகராட்சிக்கு கால விரயம் மற்றும் நிதியிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளித் தொகையை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

முந்தைய குத்தகைதாரரின் வைப்புத் தொகையை நகராட்சி கணக்கில் எடுத்துக் கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.4451/2013/அ3**

4. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் ஆண்டுக்குத்தகை இனஙகளுக்குரிய சேவைவரித் தொகை 01.07.2017 முதல் நகராட்சி கணிணி மையத்தில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு வசூல் செய்யப்படும் தொகை மாதமாதம் சுஙக வரித் துறைக்கு நேரடியாக அனுப்பப்பட வேண்டியுள்ளதால், ஆணையர் பெயரில் (GST) சரக்கு மற்றும் சேவைவரி செலுத்த ஏதுவாக Everest Consultancy Service, தாராபுரம் அலுவலகத்தில் பதிவு எண் பெற்றப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டு வந்தது. மே–2019 மற்றும் ஜீன்–2019 Filing of return online செய்தமைக்கு ரூ.2000/–ஐ மேற்படி நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.18605/2008/அ3**

5. தாராபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் 2020-2021-ம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வகை செலவினங்களுக்கு தேவையான கீழ்கண்ட உத்தேச செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | செலவின பணி விபரம் | உத்தேச தேவைப்படும் செலவீனம் ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கு சீருடைகள், காலனிகள் மற்றும் தையற்கூலி | 9.00 |
| 2. | லாரி தகுதச்சான்று பெறுதல் மற்றும் பழுதுநீக்கம் | 13.00 |
| 3. | வாகனங்களுக்கு காப்பீட்டுத்தொகை மற்றும் சாலை வரி கட்டணம் | 5.00 |
| 4. | பெட்ரோல், டீசல்,ஆயில், கிரீஸ் போன்றவை | 60.00 |
| 5. | நகராட்சி லாரிகளை குப்பையுடன் எடைபோட | 1.00 |
| 6. | ஓப்பந்தப்புள்ளி மற்றும் இதர பொதுசுகாதார விளம்பரங்கள் | 5.00 |
| 7. | கொசு மருந்து வாங்குதல் | 30.00 |
| 8. | கிருமி நாசினிகள் வாங்குதல் | 25.00 |
| 9. | பொது சுகாதாரப்பிரிவு விழிப்புணர்வு பிளக்ஸ், நோட்டீஸ், கூட்டங்கள், பேரணிகள், விளம்பரங்கள் மற்றும் முகாம் நடத்துதல் | 5.00 |

| | | |
|---|---|---|
| 10. | துப்பரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாடச்சாமான்கள் வாங்குதல் | 10.00 |
| 11. | துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல் | 10.00 |
| 12 | நிலவேம்பு கசாயம் பெற உத்தேச செலவினம் | 5.00 |
| 13. | துப்புரவு பணியாளர்கள் - தனியார் மயம்-ஊதியம் | 150.00 |
| 14. | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர் - ஊதியம் | 70.00 |
| 15. | அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் பணிபுரிந்திடும் துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 20.00 |
| 16. | கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தும் இயந்திரம் (பம்பு, ஸ்பிரேயர், புகை அடிக்கும் மெஷின் போன்றவை) புதியது வாங்குதல் மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு | 20.00 |
| 17. | பொது சுகாதார பிரிவிற்கு நிரந்தர முன்வைப்பு நிதி | 0.5 |
| 18. | இதர பொது சுகாதார நலன் கருதி மேற்கொள்ளும் செலவீனம்( தொற்று நோய், பொது சுகாதாரம் போன்றவைகள்) | 10.0 |
| 19. | நிலவேம்பு குடிநீர் காய்ச்ச பயன்படுத்தும் சிலிண்டர் செலவு (எரிபொருள்) | 2.0 |
| 20. | கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணி கண்காணிப்பு சாதனம் பொருத்தியமைக்கான மாதத் தொகை வழங்க வருட உத்தேச செலவினம் | 3.50 |

**ந.க.எண்:891/2020/எச்1**

**அலுவலக குறிப்பு:** பொது சுகாதார பிரிவிற்கு தேவையான மேற்கண்ட செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

6. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனங்களில் வரிசை எண்.9ல் இடம்பெற்றுள்ள புதிய பேருந்து நிலையத்தில் ஒலி,ஒளி பெருக்கி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் 2018 முதல் 2021 வரை திரு.எஸ்.ஜெகதீஸ் என்பவருக்கு ஆண்டுக்குத்தகைக்கு விடப்பட்டது. தற்பொழுது 01.04.2020 (மூன்றாம் ஆண்டு) தனது குடும்ப

சூழ்நிலையின் காரணமாக குத்தகை இனம் நடத்த முடியவில்லை என விண்ணப்பம் வழங்கியுள்ளார். முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கு குத்தகை தொகை முழுவதும் செலுத்தியுள்ளார். எனவே, **01/04/2020** முதல் பொதுஏல நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**7.** தாராபுரம் நகராட்சி, பொறியியல்பிரிவில் இயஙகிவரும் ஒளி அச்சு நகல் இயந்திரம் (KONICA MINOLTA C226 Color Copier) ஹிந்துஸ்தான் ஆட்டோமெஷின்–கோவை, என்றநிறுவனத்திடம் வாஙகப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. திட்டப்பணிகளுக்கான விரிவானதிட்ட அறிக்கை, திட்டம் குறித்த ஆய்வு அறிக்கை, திட்டப்பணி குறித்த முடிவு அறிக்கை, தூய்மைபாரததிட்டம், சுகாதாரபணிகள் மற்றும் இதரபிரிவு அலுவல் சார்ந்து புகைப்படஙகள் அச்சு(Print) மற்றும் படியெடுக்க (Xerox) பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏனவே அவ்வப்போது இயந்திரத்தில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய ஹிந்துஸ்தான் ஆட்டோமெஷின்–கோவை நிறுவனத்தின் மூலம் **2020–2021**ஆம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்புமேற்கொள்ள ஆகும் உத்தேசசெலவினம் ரூ.**28,960/–**க்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**ந.க.எண்.3695/2018/இ1**

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**8.** தாராபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயஙகிவரும் ஒளிஅச்சுநகல்இயந்திரம் (Kyocera Taskalfa 3010i) ஹிந்துஸ்தான் ஆட்டோமெஷின்–கோவை, என்ற நிறுவனத்திடம் வாஙகப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. திட்டப்பணிகளுக்கான விரிவானதிட்ட அறிக்கை, திட்டம் குறித்த ஆய்வு அறிக்கை, அலுவலக கடிதஙகள், குடிநீர் கேட்புகள், குடிநீர் இணைப்புபதிவேடு, வரிவசூல் பதிவேடு, திட்டப்பணி குறித்த முடிவு அறிக்கை மற்றும் இதரபிரிவு அலுவல் சார்ந்து அச்சு (Print) மற்றும் படியெடுக்க (Xerox) பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே அவ்வப்போது இயந்திரத்தில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய ஹிந்துஸ்தான் ஆட்டோமெஷின்–கோவைநிறுவனத்தின் மூலம் **2020–2021**ஆம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**24760/–**க்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**ந.க.எண்.1893/2017/இ1**

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**9.** தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு 11 முதல் 20 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகளை அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

10. தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 10 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகளை அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

11. தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 21 முதல் 30 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகளை அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**12.** தாராபுரம் நகராட்சி மூலம் அனைத்து வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படும் 12 எண்ணிக்கை தொட்டிகளிலும், தற்போது குளோரின் திரவ இயந்திரம் பெருத்தப்பட்டு சோடியம் ஹைப்போ குளோரைட் லீக்யூடு நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குளோரின் இயந்திரம் பொருத்தி இரண்டு வருடஙகளுக்கு மேல் ஆவதால் 12 மேல்நிலைத் தொட்டிகளிலும் பொருத்தப்பட்டுள்ள திரவ குளோரின் இயந்திரம் பாராமரிப்பு செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, திரவ குளோரின் இயந்திரம் ஆண்டு பராமரிப்பு செய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**13.** தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு எண்கள். 4, 8, 30, 23 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேஙக் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிது. மேற்குறிப்பிட்டு வார்டு பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் பழுதடைந்தும், சின்டெக்ஸ் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ள திட்டுகள் உடையும் நிலையில் உள்ளது. மேலும், இனிவரும் வறட்சிகாலஙகளில் தண்ணீர் தடையின்றி விநியோகம் செய்ய மேற்கண்ட வார்டுகளில் உள்ள பழைய சின்டெக்ஸ் டேஙக்குகளை அகற்றிவிட்டு புதிய சின்டெக்ஸ் டேஙக் பொருத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே, மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.40** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

**14.** இந்நகராட்சி ஆணையர் அறையில் உள்ள அலுமினியம் தடுப்பு அமைப்பில் கண்ணாடியில் மறைப்பு ஒட்டும் பணிமேற்கொள்ள ரூ.30000/—க்கு மதிப்பீடுதயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு.R.தஙகராஜ் என்பவர் வசம் ஒப்படைப்பு பணியாக அளித்து பணிசெய்து முடிக்க மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:270/2020/இ1**

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**15.** தாராபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை மின்னனு முறையில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு அலுவலர்களின் டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ் அவசியமாகிறது. அதன்படி 2020—2021ஆம் ஆண்டிற்கு ஆணையாளர் மற்றும் நகராட்சிபொறியாளர், உதவி/இளநிலைப்பொறியாளர், பொதுப்பணிமேற்பார்வையாளர் ஆகியோருக்கு டிஜிட்டல் கையொப்பசான்று (Digital Signature Certificate – DSC) புதுப்பித்தல் / புதிதாக பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20000/—க்கு மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:16678/2008/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டசெலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**16.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி (GST) தொகையினை அரசாணையின்படி வணிகவரித்துறைக்கு ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. மேற்படி ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைவரிதொகை தனியார் கணக்காளர் மூலம் சரிக்கட்டுதல் செய்யப்பட்டு, அதன்படி உரியதொகை வணிகவரித்துறைக்கு செலுத்தப்படுவருகிறது. தனியார் கணக்காளர் மூலம் சரிக்கட்டுதல் செய்யப்படுவதற்கு நகராட்சி மூலம் தொகை வழஙக 2020—2021 க்கு ஆகும் உத்தேசசெலவினம் ரூ.18000/—க்கு மன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

**ந.க.எண்:4535/2018/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி 2020—2021இல் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

17. தாராபுரம் நகராட்சி 2020—2021 ஆம் நிதியாண்டில் பொறியியல் பிரிவில் நடைபெறும் பல்வேறு திட்டப்பணி மற்றும் பொதுப்பணிகளின் ஒப்பந்தபுள்ளியினை மாநில மற்றும் மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்யவும், வளர்ச்சி பணிகளை நாளிதழில் விளம்பரம் செய்யவும் விளம்பரக் கட்டணத்திற்கு ஆகும் உத்தேசசெலவினம் ரூ.8.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.4533/2016/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படிதொகையினைநகராட்சிபொதுநிதி 2020–21இல் செலவுமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**18.** தாராபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பொதுநிதி மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகிறது. அணைத்து கட்டடப்பணிக்கும் அடித்தளம் அமைப்பதற்கு மண் பரிசோதனை செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் கட்டடவடிவமைப்பு தயாரிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. அதன்படி 2020–2021ஆம் ஆண்டிற்கு மண் பரிசோதனை மற்றும் கட்டட வடிவமைப்பு அரசு அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்ப கல்லூரிகள் மூலம் பெறுவதற்கு ஆகும் உத்தேசசெலவினம் ரூ.5.00/–இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:790 /2019 /இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்டசெலவினம் பொதுநிதியிலிருந்துமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**19.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் குடியிருப்பில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அடிப்படைவசதிகள் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அதன்படி சோபா, டீப்பாய், அலமாரி மற்றும் தொலைக்காட்சி வாங்கி பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.225000/–மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்: 325/2020/இ1**

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

20. தாராபுரம் நகராட்சியில் 7.02 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட 30 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட குழாய் திறப்பாளர் பணியிடம் 7 ஆகும். தற்போது 3 பணியாளர்கள் ஒய்வு பெற்றுவிட்டனர். இந்நிலையில் புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட 3 மேல்நிலைத் தொட்டிகளையும் சேர்ந்து மொத்தம்12 மேல்நிலைத் தொட்டிகள் உள்ளது. குடிநீர் விநியோகம் செய்ய 30 வார்டுகளிலும் 180 வால்வுகளையும் தினசரி திறந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி உள்ளது. மேலும் 15 நாட்களுக்கு ஒருமுறை 12 மேல்நிலைத் தொட்டிகளையும் சுத்தம் செய்யும் பணியும், 247 ஆழ்துளை கிணற்று நீர் குழாய்கள் மூலம் 30 வார்டுகளிலும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 12 குடிநீர் மேல்நிலைத் தொட்களிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. அதனை இயக்கி

தினசரி குடிநீரில் திரவ குளோரின் கலக்க இயக்குவதற்கு ஆட்கள் தேவையாக உள்ளது. மேலும், காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் நகரில் உள்ள அனைத்து வார்டுகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அனைத்து பணிகளையும் செய்வதற்கு மொத்தம் 21 ஆட்கள் தேவையாக உள்ளது. அதில் நிரந்தர குடிநீர் பணியாளர்கள் 3 பேர் குழாய் திறப்பாளராக உள்ளனர். அவர்களைக் கொண்டு அனைத்து பணிகளையும் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நகராட்சியின் வருவாயில் 49 சதவீதத்திற்கு மேல் ஊதியம் செலவிடப்படுவதால் புதிதாக பணியாளர்கள் நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவில் குழு மூலம் பணியாளர்கள் பணியமர்த்தக்கூடாது எனத் தெரிவித்துள்ளதற்கிணஙக, நகராட்சியின் அத்தியாவசியப் பணியாக குடிநீர் விநியோக பணி பாதிப்பு ஏற்படக் கூடாதென்பதற்காக நகராட்சிக்கு தேவைப்படும் 18 குழாய் திறப்பாளர்களை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ள குறைந்த பட்ச தினக்கூலியினை அடிப்படையாக கொண்டு, தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், நடப்பாண்டிற்கு தனியார் மூலம் பணி புரிந்து வரும் 18 குழாய் திறப்பாளர்கள் குடிநீர் பணிக்காக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ள குறைந்த பட்ச தினக்கூலியினை அடிப்படையாக கொண்டு 18 நபர்களை நடப்பாண்டில் நான்கு மாதஙகளுக்கு வழஙகவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.95 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

21. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்கள். 13, 14, 26, 30, 24, 22, 23 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் போது தண்ணீர் சில மேடான பகுதிகளில் மிகக் குறைவான அளவே செல்கிறது. அப்பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பதிக்கப்பட்ட விநியோகக் குழாய்கன் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள விநியோக குழாய்களுடன் இணைக்கவும் தேவைப்படும் இடஙகளில் சுலிஸ் வால்வுகள் பொருத்தவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

22. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்கள். 14, 19, 30, 16, 3, 17 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் போது தண்ணீர் சில மேடான பகுதிகளில் மிகக் குறைவான அளவே செல்கிறது. அப்பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பதிக்கப்பட்ட

விநியோகக் குழாய்கள் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள விநியோக குழாய்களுடன் இணைக்கவும் தேவைப்படும் இடஙகளில் சுலிஸ் வால்வுகள் பொருத்தவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

23. தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு எண்கள் 10, 18, 29, 6 ஆகிய பகுதிகளில் உள்ள சிறிய மேல்நிலைத் தொட்டிகலிருந்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அந்த சின்டெக்ஸ் பழுதடைந்தும், சின்டெக்ஸ் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ள திட்டுகள் உடையும் நிலையில் உள்ளது. மேலும், இனிவரும் வறட்சிகாலஙகளில் தண்ணீர் தடையின்றி விநியோகம் செய்ய மேற்கண்ட வார்டுகளில் உள்ள பழைய சின்டெக்ஸ் டேஙக்குகளை அகற்றிவிட்டு புதிய சின்டெக்ஸ் டேஙக் பொருத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே, மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

24. தாராபுரம் நகராட்சி குடிநீர் பிரிவு தண்ணீர் லாரி TN-33-V-9442 க்கு இன்சூரன்ஸ் கட்டணம், FC தகுதிகான சான்று பெறவும், சாலை வரி மற்றும் அதற்குண்டான மேல்வரி ஆகியவை செலுத்த 2020–21ம் ஆண்டுக்கு செலுத்த உத்தேசமாக ரூ.300000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.

25. தாராபுரம் நகராட்சி மனித கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அணுகுசாலை அமைக்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A.கணேசன், ஒப்பந்ததாரர் , தாராபுரம். | மதிப்பீட்டைவிட 4.78% அதிகம் |
| 2 | திரு.R.தங்கராஜ், ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டைவிட 3. 73% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவான விலைவிகிதம் அதாவதுமதிப்பீட்டைவிட 3.73% அதிகம் என்றஅளவில்திரு.R.தங்கராஜ், ஒப்பந்ததாரர் தாராபுரம் அவர்கள்கோரியுள்ளார். நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தை விட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள இயலாதநிலை காரணமாக கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.R.தங்கராஜ், ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக ந.க.எண்.248/2020/இ1, நாள்.27.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்துத்தரக் கோரிவிலைக் குறைப்புக் கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.27.02.2020இல் ஆட்கூலி, கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றம் காரணமாக விலைவிகிதத்தை குறைத்து தரஇயலாது என மதிப்பீட்டைவிட3.73% அதிகம் என்ற விலைவிகிதத்திற்கு அனுமதி அளிக்குமாறும் கேட்டுள்ளார்கள்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறவாய்ப்பு இல்லை என்பதாலும் மேற்கண்டபணியின் அவசரஅவசியம் கருதிதிரு.R.தங்கராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:248/2020/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படிபணிக்கு ஆகும் கூடுதல் செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**26.** தாராபுரம் நகராட்சி மனிதகழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் தார்தளம், கூடுதல்சேகரிப்பு(collection Tank 2) மற்றும் சந்திப்புதொட்டி அமைக்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A.கணேசன், ஒப்பந்ததாரர் ,தாராபுரம். | மதிப்பீட்டைவிட 5.70% அதிகம் |
| 2 | திரு.R.தங்கராஜ், ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டைவிட 7. 95% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவான விலைவிகிதம் அதாவது மதிப்பீட்டைவிட **5.70%** அதிகம் என்ற அளவில் திரு.A.கணேசன், ஒப்பந்ததாரர் தாராபுரம் அவர்கள் கோரியுள்ளார். நகராட்சிபொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளிவிதிகளில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தைவிட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள இயலாதநிலை காரணமாக கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரார் திரு.A.கணேசன், ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக ந.க.எண்.248/2020/இ1, நாள்.27.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்துத்தரக் கோரி விலைக்குறைப்புக் கடிதம் (Negotiation Letter) வழங்கப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரார் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.27.02.2020இல் ஆட்கூலி, கட்டுமானப் பொருள்களின் விலைஏற்றம் காரணமாக விலை மதிப்பீட்டைவிட4.90% அதிகம் என்ற விலைவிகிதத்திற்கு அனுமதி அளிக்குமாறும் கேட்டுள்ளார்கள்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறவாய்ப்பு இல்லை என்பதாலும் மேற்கண்ட பணியன் அவசர அவசியம் கருதி திரு.A.கணேசன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

**ந.க.எண்:248/2020/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படிபணிக்கு ஆகும் கூடுதல் செலவினத்தைபொதுநிதியிலிருந்துவழஙகமன்றம் அனுமதிக்கலாம்.

27. தாராபுரம் நகராட்சி அகஸ்தீஸ்வரர் கோவில் அருகில் உள்ள சோலார் மின் விளக்கு பழுது நீக்கி சீரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.68,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைவிகிதம்** |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.சிஸ்கான் சிஸ்டம்ஸ், பொள்ளாச்சி | மதிப்பீட்டைவிட 0.05% குறைவு |
| 2 | திருவாளர்கள்.சாகர் எலெக்ட்ரிக்கல்ஸ், பொள்ளாச்சி | மதிப்பீட்டைவிட 0. 26% அதிகம் |

**ந.க.எண்:249/2020/இ1**

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.05%** குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள திருவாளர்கள்.சிஸ்கான் சிஸ்டம்ஸ், பொள்ளாச்சி அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.